## 2012ஆம் ஆண்டின் Iஆம் இலக்க ஐக்கிய நாடுகள் ஒழுங்கு விதியின் கீழ் தடைசெய்யப்பட்ட நிறுவனங்கள் மீதான வருடாந்த மீளாய்வு

ஐக்கிய நாடுகள் அமைப்பின் 1968ஆம் ஆண்டின் 45ஆம் இலக்கச் சட்டத்தின் கீழுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி 1854 / 41ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் கீழ் 2014 மார்ச் 21ஆந் திகதியன்று இலங்கை அரசாங்கம் 16 அமைப்புகளையும் 424 தனிப்பட்ட வர்களையும் தடை செய்துள்ளது. இத்தடையானது 2014 மார்ச் மாதம் 29ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட மேல் மாகாண சபையினதும் தென் மாகாண சபையினதும் தேர்தல்களுக்கு எட்டு நாட்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டது.

தொடக்கத் தடைசெய்தல் நடைமுறையானது அவசரமாக செய்யப்பட்டதுடன் இது கடுமையான மதிப்பீடு மற்றும் சரிபார்த்தல்களுக்கு உட்படுத்தப்படாமல் செய்யப்பட்டுள்ளது. அநேக பட்டியலிடப்பட்ட அமைப்புகள் எப்போதும் வன் செயலையோ அல்லது பயங்கரவாதத்தையோ மன்னிக்கவில்லை. தடை விதிப்பதற்கு எட்டு வருடங்களுக்கு முன்னரே இறந்த தனிப்பட்டவர் ஒருவரையும் உள்ளடக்கி தடைவிதிக்கப்பட்டவர்களின் சிலர் தடைவிதிக்கப் பட்ட காலப் பகுதியில் இறந்திருந்தனர்.

2012ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட 1ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் பேரவையின் ஒழுங்கு விதியானது, அரசாங்கம் தடை செய்யப்பட்ட அமைப்புகளின் பட்டியலை ஆகக் குறைந்தது ஆண்டுக்கு ஒரு தடவையேனும் மீளாய்வு செய்து அதை இற்றைவரையானதாக்க வேண்டுமென்ற கடப்பாட்டை விதிக்கின்றது. சகல வடிவங்களிலும் தோற்றப் பாடுகளிலுமுள்ள பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதில் உறுதியுடனுள்ள புதிய அரசாங்கமானது அமைப்புகளின் பட்டியலை இற்றைவரையானதாக்குவதன் பொருட்டு பட்டியலின் முறைமையான மீளாய்வு நடைமுறையொன்றைச் செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளது.

கடந்த ஆறுமாதங்களில் சட்ட அமுலாக்கல் மற்றும் புலனாய்வு நிறுவனங்கள், தடைசெய்யப்பட்ட அமைப்புகள் மற்றும் தனிப்பட்டவர்கள் பற்றி விரிவானதும் கவனமானதுமான மீளாய்வைச் செய்துள்ளன. மீளாய்வு நடைமுறையானது எட்டு அமைப்புகளையும் 267 தனிப்பட்டவர்களையும் நிரற்படுத்துவதை நியாயப்படுத்தும் புலன் விசாரணைத்தகவலோ அல்லது சான்றோ இல்லை எனக் குறிப்பிட்டுள்ளது. எட்டு அமைப்புகளையும் 157 தனிப்பட்டவர்களையும் உள்ளடக்கி பிரிவினையைத்

தூண்டும் வேலையைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கும் தொகுதிகள் தடைசெய்யப்பட்ட நிலையிலேயே உள்ளன.

இந்த மீளாய்வின் விளைவாக, எமது சட்ட அமுலாக்கல் மற்றும் புலனாய்வு சேவைகள் தற்போது அவற்றின் வளங்களை திறமையாகக் கையாளுகின்றதுடன் உண்மையான அச்சுறுத்தல்கள் மீது தங்களுடைய தீவிர கவனத்தைச் செலுத்தி இலங்கையர்கள் அனைவரினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்றன. மேலும் புதிய அரசாங்கம், சனநாயகம், நல்லாட்சி, சட்டவாட்சி, பொறுப்புக்கூறல், நல்லிணக்கத்திற்கான பொறுப்பாணையுடன் அதிகாரத்திற்கு வந்ததிலிருந்து அநேக பட்டியறபடுத்தப்பட்ட தொகுதியினர்கள் ஐக்கியமானதும் பிரிக்கப்படாததுமான இலங்கைக்கான தங்களுடைய பொறுப்பு பற்றி பகிரங்க அறிக்கைகளை உலக அரங்குகளில் தெரிவித்துள்ளனர். இது வன்செயலுக்கான மூலவேர்க் காரணங்களை கவனத்திற்கு கொண்டுள்ள நடவடிக்கைகளுடன் இணைந்து சிறந்த புலன்விசாரணை, இறுக்கமான சட்டம், நெருக்கமான பயங்கரவாதத்திற்கு எதிரான பங்காளித்துவங்கள் மூலமாக பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்திறமுறை செயற்படத் தொடங்கியுள்ளமையைச் சுட்டிக் காட்டுகின்றது.

எமது சட்டக் கடப்பாடுகளின்படி அரசாங்கமானது வருடந்தோறும் தடைசெய்யப்பட்ட ஆட்களின் பட்டியலை மீளாய்வு செய்து அதை இற்றைவரையானதாக்கும். பிற தொகுதியினர்களும் தனிப்பட்ட வர்களும் ஏனைய தேவையான நடவடிக்கைகளுடன் கூடுதலான வன்செயலுக்கு கண்டனம் தெரிவிக்கும் பொறுப்பேற்புகளை மேற்கொள்வார்கள் என நாம் நம்புகின்றோம். அப்போது இவர்களின் விடயமும் முன்பு தடைநீக்கம் செய்யப் பட்டு வட இலங்கையிலும் தென்னிலங்கையிலும் தடைசெய்யப்பட்டுள்ள சனநாயக பிரதான நீரோட்டத்தில் வெற்றிகரமாகச் சேர்ந்து தற்போது இலங்கையின் முன்னேற்றத்திற்காக பணியாற்றிக் கொண்டிருப்பவர்களுடன் சேர்ந்து பணியாற்ற, தடைநீக்கம் செய்யப்படுவதற்காக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படலாம்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு
கொழும்பு